**ஹாலிஎல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 29 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 22 திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து ஹாலிஎல பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பொதுவைப்பு கணக்கு மீதி ரூபா 6,806,185 ஆக பேரேட்டில் காட்டப்பட் போதிலும் நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புக்களின் படி அதனை ரூபா 1,850,884 என காட்டப்பட்டுள்ளன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | கடந்த வருடத்தில் காணப்பட்ட சமப்படாமையினால் இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 க்கு நிலுவை முத்திரை கட்டணம் ரூபா 22,935,662 ஆக இருந்தபோதிலும் நிதிக்கூற்றில் ரூபா 24,000,000 ஆக காட்டப்பட்டுள்ளன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் படி மீதி மற்றும் குறிப்புக்களின் படி மீதிகளிற்கிடையில் ரூபா 37,232,820 வேறுபாடு காணப்பட்டிருந்தது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 03 கணக்கு விடயங்களுடன் தொடர்பான கணக்கு மீதிகள் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 103,446,259 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடு, உறுதிப்பத்திரம், இணைப்புக்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கணக்கு மீதிகள் உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆவணங்களை இற்றைப்படுத்துகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இலக்கம் 15 பிரதேச சபைச் சட்டம் | | | |
| | 19(XI) மற்றும் 173, 174 பந்தி | சபைக்கு சொந்தமான 03 காணிகள் அமைச்சின் அனுமதி இல்லாது மற்றும் பெறுகை நடைமுறை பின்பற்றாது மூன்றாம் நபருக்கு நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கியிருந்தது. | அமைச்சின் அனுமதி எடுக்க வேண்டும். பெறுகை நடைமுறை பின்பற்ற வேண்டும். | ஆளுநரின் அனுமதி எடுக்க தேவையான ஆவணம் சமர்ப்பித்துள்ளேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நிதி ஒழுங்கு விதி 371 | 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கூட்டுமொத்த தொகை ரூபா 217,718 உபகட்டுநிதி 07 வருடம் முடிவடைந்துள்ள போதும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உபகட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | உபகட்டுநிதி தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,277,597 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,687,228 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,668,568 | 2,000,494 | 1,434,922 | 565,574 | 2,665,364 | 2,000,494 | 1,311,093 | 689,401 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,465,000 | 1,465,000 | 2,145,425 | - | 1,415,000 | - | 1,640,810 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,001,352 | 30,418,817 | 288,424 | 161,383 | 30,624,971 | 3,041,806 | 232,887 | 2,808,919 |
| | மொத்தம் | 7,134,920 | 33,884,311 | 3,868,771 | 726,957 | 34,705,335 | 5,042,300 | 3,184,790 | 3,498,320 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருடத்திற்கு அதிக காலமாக காணப்பட்ட சேகரிக்கப்படாத நிலுவை வருமானம் ரூபா 83,825,056 அறவிடப்படவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | இவ் கணக்கு மீதி அறவிட நடவடிக்கை செய்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 23,000,000 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 4,861,609 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கம் இனங்கண்டு இருக்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் வாகன தரிப்பிட மதில் கட்டுமாண திட்டத்திற்கு 2019 யூலை 08 ஆந் திகதிய ரூபா 1,901,470 பெறுமதிக்கு கமக்கார அமைப்புடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட இவ் திட்டத்திற்கு ரூபா 380,294 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆகஸ்ட் | ஒப்பந்தப்படி சரியான திகதிக்கு வேலை முடிக்கப்பட வேண்டும். | ஒப்பந்தம் செய்யும்போது காணி தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டமையால் அளவீடு செய்தபின் மீளவும் ஒப்பந்தம் ஆரம்பிப்போம். |

| | | | |
|---|---|---|---|
| | 06 ஆந் திகதிய இவ் வேலையை நேரடியாக பார்வையிட்டபோது ஒப்பந்தம் தொடர்பாக எந்தவித வேலையும் அல்லது ஒப்பந்தத்திற்கு தேவையான பொருட்கள் தளத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கடந்த வருடங்களில் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தில் காணிகட்டடமாக காணப்பட்ட ரூபா 100,000 பெறுமதியான கணக்கு அனுமதியின்றி மீளாய்வாண்டில் நிதிக்கூற்றில் பதிவளிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்து பதிவளிக்கும் போது சரியான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். | கடந்த வருடம் கணக்காய்வு அறிக்கைப்படி பதிவளிப்பு மேற்கொண்டுள்ளேன். |
| (இ) | 05 வருடங்களுக்கு மேலாக காணப்படுகின்ற செலுத்த வேண்டிய செலவு மற்றும் ஒப்பந்த கடன்கொடுநர் ரூபா 52,607,778 மீளாய்வாண்டிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகள் செலுத்தப்பட வேண்டும். | இவ் கணக்கு மீதிகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணிகளில் 13 பதவிகள் தொடர்பாக 28 வெற்றிடங்கள் உள்ளது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு கோரிக்கை விடுத்துள்ளேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கு பிரதேச சபையினால் உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் உள்ளக கணக்காய்வு செய்வேன். |